BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# தொல்லியல் நோக்கில் நாகதேவதை வழிபாடு
# Dragon Goddess Worship in Archaeology

**முனைவர் ச. மணிமேகலை**

உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (த), திருப்பத்தூர்.

**Dr. S. Manimegalai**

Assistant Professor, Department of Tamil, Pure Heart College (A), Tirupattur – 635601

**Mobile: 9345404274, Email udhaijasmine@gmail.com. ORCID:https://orcid.org/0000-0003-0570-6101**

**Abstract**

"National litigation is a thing of the past
Not just an echo
It is also the loudest voice of the present."

Sokhalo, a Russian national lawyer, has mentioned. In the history of mankind folk customs are closely associated with the beliefs, rituals, thoughts and culture of the people.In these folk traditions, totemism, myths, ballads, performance, imagery, worship rituals, customs, and aesthetic expressions are identified as key elements.

**Keywords :** Ahi, Serpent in the Vedas, Folklore, Nature worship

**ஆய்வுச் சுருக்கம்**

"நாட்டார் வழக்காறு கடந்த காலத்தின்
எதிரொலி மட்டுமல்ல
இது நிகழ்காலத்தின் உரத்த குரலும் ஆகும்"

என்று ருஷ்ய நாட்டு நாட்டார் வழக்காற்றியலாளர் சொக்கலோ குறிப்பிட்டுள்ளார். மனித குல வரலாற்றில் மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், சிந்தனைகள், பண்பாடு ஆகியவற்றோடு மிகுந்த தொடர்டையது நாட்டார் வழக்காறுகள் ஆகும். இந்த நாட்டார் வழக்காறுகளில் குலக்குறி, தொன்மக்கதை, கதைப்பாடல், நிகழ்த்துதல், உருவம், வழிபாட்டுச் சடங்கு முறைகள், பழக்கவழக்கங்கள், அழகியல் சார்ந்த வெளிபாடுகளாக அடையாளம் கொள்ளப்படுகிறது.

**திறவுச்சொற்கள் :** அஹீ, வேதங்களில் நாகம், நாட்டார் வழக்காறு, இயற்கை வழிபாடு

## முன்னுரை

மனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வு முறையை மேற்கொள்ளும்போது இயற்கையின் பல்வேறு ஆற்றல்களையும், அதீத தன்மைகளையும் கண்டு அஞ்சியும் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கவும் இயற்கைச் சக்திகளான நிலம், நீர், காற்று, ஆகாயம், இடி, மழை, மின்னல், சூரியன், சந்திரன் போன்றவற்றை வழிபடலானான். இதனை,

*"ஞாயிறு, திங்கள், தீச்சுடர்" (தொல். பொருள். நூற்பா. 85)*

என்ற நூற்பாவிலும்,

*"ஞாயிறு போற்றுதும்……திங்களைப் போற்றுதும்…மாமழைப் போற்றதும்…….." (சிலம்பு. கடவுள் வாழ்த்து. 1 : 1 : 7)*

என்ற பாடலின் வழி அறிய முடிகிறது.

இந்தியாவை பொருத்த வரை இமயம் முதல் குமரி வரை பாம்பு வழிபாடு இருந்து வருகிறது. குறிப்பாகத் தென் இந்தியாவில் பாம்பு வழிபாடு அம்மன் வழிபாட்டுடன் இணைத்தே நடைபெறுகிறது. நாக வழிபாடு மிகவும் தொன்மையானது. முதலில் இயற்கை வழிபாட்டை அறிந்த மனிதன் பின்னர் கடவுள் வழிபாட்டை மேற்கொண்டான். பின்னர் தனக்கு நல்வாழ்வு தரும் சக்திகளை மனிதன் பல்வேறு உருவங்களில் கண்டு அவற்றிற்குக் கோவில் எழுப்பி வழிபட்டான். முதலில் பயன் காரணமாக நாகங்களை வழிப்பட்டவர்கள் பின்னர் அது ஏதோ ஒரு தெய்வச் சக்திக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும், விதி முடிந்தவரை மட்டுமே அது கடிப்பதாகவும் நம்பினார்கள்.

நாளடைவில் அனைத்து விலங்கு வழிபாட்டு முறைகளிலும் பாம்பு வழிபாட்டிற்கு எனத் தனி முக்கியத்துவம் ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை பாம்பு வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பாம்பு வழிபாடு வேறு பல நாடுகளிலும் இருந்தும் வந்துள்ளது. பெனீசியா, மெஸபடோமியா, கிரேக்கம், இத்தாலி, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, எகிப்து, நேபாளம் ஆகிய நாடுகளிலும் இன்றளவும் பாம்பு வழிபாடு இருந்து வருகிறது.

**இலக்கியங்களில் நாகங்களின் வழிபாடு**

சங்க இலக்கியப்பாக்கள் பலவற்றில் 'நாகம்' என்பது குறிப்பிடப்படுகிறது. பத்துப்பாட்டு நூலுக்கு உரையெழுதிய நச்சினார்கினியர் குறிஞ்சிப்பாட்டில் வரும் 'நாகம்' என்பதற்குப் 'புன்னைப்பூ' என்றும் பிறவிடங்களில் வரும் 'நாகம்' என்பதற்கு 'சுரபுன்னை' என்றும் உரை கண்டுள்ளார்.

நற்றிணைப் பாடலைப் பாடிய சேந்தம்பூதனார் குறிஞ்சி நிலத்தை வருணனைச் செய்யும் போது இவ்வாறாக பாம்புக் குறித்த செய்தியைப் பதிவு செய்துள்ளார். அவை,

*"நெடும் பல் குன்றத்துக் குறும்பல மறுகி*
*தா இல் பெரும் பெயல் தலைஇய யாமத்து,*
*களிறு அகப்படுத்த பெருஞ்சின மாசுணம்*
*வெளிறு இல் காழ் மரம் பிணித்து நனி மிளிர்க்கும்*
*சாந்தம் போகிய தேம் கமழ் விடர் முகை" (நற்றி. 261)*

என்னும் பாடலடிகளில், நெடிந்து உயர்ந்த மலையில் இரவு நேரத்தில் மழை கொட்டுகிறது. அப்பொழுது ஒரு பெரிய மலைப் பாம்பு (மாசுணம்) ஒரு யானையை விழுங்கிக் களிறு அகப்படுத்தக் கொண்டிருக்கிறது. அது மரத்தில் தொங்கியவாறு யானையின் உடலை வளைத்துப் பின்னிப் புரட்டி விட்டது என்பதன் வாயிலாக பாம்பு குறித்து அறிய முடிகிறது.

தமிழர் பண்பாட்டில் நாக வழிபாடு பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. சங்ககால இலக்கியமான மலைபடுகடாம் என்ற நூல் 'நன்னன் சேய் நன்னன்' என்ற மன்னனைக் காண அவனது மலையான நவிரமலை (சவ்வாதுமலை) யைக் கூத்தர்கள் கடக்க முயன்ற போது இடையில் பல பாம்புகள் தென்படும் அவற்றைக் கைதொழுது வணங்கிச் செல்லுங்கள் என்று பாடியுள்ளார். இன்றைக்கும் சவ்வாதுமலை பகுதிகளில் மக்கள் திருவிழா நாட்களில் பாம்பு புற்றுமண்ணை அறுத்து வந்த அதற்குப் பச்சைப் பந்தலிட்டு வழிபடுகின்றனர்.

**வேதங்களில் நாகங்கள்**

வேதங்களில் பல இடங்களில் பாம்புகளை குறித்த விரிவான குறிப்புகள் வருகின்றன. வேதங்கால மக்கள் பாம்புகளை அஹீ என்ற பெயரில் அழைத்திருக்கிறார்கள். பழங்கால பாஞ்சல தேசத்தின் தலைநகரம் அஹீ சத்திரமாகும். அதாவது இதன் பொருள் பாம்புகளின் வீடு என்று சொல்லலாம்.

இந்த தேசத்தின் மன்னர்களாக விளங்கிய அக்னிமித்தரன், பானு மித்திரன் ஆகியோர்களின் காலத்து நாணயங்களில் பாம்பு முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

**தொல்லியல் அடிப்படையில் நாகதேவதை வழிபாடு**

பண்டைய கால சிற்பங்களும், ஓவியங்களும், நாகர்களும், நாககன்னிகளும் காட்டப்படுகிறார்கள். விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த நாக தேவதை (நாகினி) நடுகல் ஒன்று உள்ளது.



**படம் எடுத்த நிலையில் உள்ள பாம்பு உருவம்**

இக்கல்லானது 3 அடி உயரமும், 2 அடி அகலத்தில் அமைந்துள்ளது. காலில் இருந்து இடுப்புப் பகுதி வரை நாகமாகவும், இடுப்பில் இருந்து தலைப்பகுதி வரை பெண்ணாகவும் நாகதேவதை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்லின் தலையில் கிரீடம் போன்ற அமைப்பு ஒன்றும் உள்ளது. கைகளை வணங்கிய கோலத்தில் நாகதேவதை காட்சி தருகிறது. நாக தேவதையின் இரண்டுப் பக்கங்களிலும் படம் எடுத்து கோலத்தில் இரண்டு நாக உருவங்கள் உள்ளன.



பாதி மனித உருவம் பாதி பாம்பு உருவம் கொண்ட கல், இரண்டு நாகங்கள் பின்னிய நிலையில் உள்ள கல்

இக்கல்லுக்கு அருகிலேயே நாக உருவம் பொறிக்கப்பட்ட கல் ஒன்றும் உள்ளது. அதன் அருகே தலைப்பகுதி மட்டும் படம் எடுத்த கோலத்தில் உருவங்கள் கொண்ட கற்கள் காணப்படுகின்றன. படம் எடுத்த நிலையில் இருக்கக் கூடிய இரண்டு பாம்புகள் பின்னிப்பிணைந்துள்ளதைப் போன்ற கல் ஒன்றும் உள்ளது. அதனையடுத்த கல்லில் சிவலிங்கம் உருவம் கொண்டும் உள்ளது.

**முடிவுரை**

பாம்புகளை பொறுத்த வரை எல்லா மதத்தினரும் அறிவு பூர்வமாகவும், மூடத்தனமாகவும் நம்பினர் என்றே சொல்ல வேண்டும். சிவன், காளி, காலபைரவர் போன்ற கடவுளர்களுக்கு அணிகலனாகவும், திருமாலுக்குப் படுக்கையாக ஆதிசேடன் இருப்பதாகவும் மக்கள் நம்பினர். மரங்களின் அடியில் கற்களில் பாம்புருவம் பொறித்து வணங்குவது வழக்கம். இங்கு மேல் பாதி உடல் பெண்ணாகவும் கீழ்ப் பாதியுடன் பாம்பாகவும் வடித்த சிலையை 500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் வழிபட்டது இதன் மூலம் வெளிப்படுகிறது.

**பயன்பட்ட நூல்கள்**


1. புலியூர்கேசிகன், சிலப்பதிகாரம், கிழக்கு பதிப்பகம், சென்னை, 2002
2. செயபால், இரா., அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
3. கதிர் முருகு, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை – 14, 2009
4. சுப்பிரமணியன், ச. வே., தொல்காப்பியத் தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.



**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.